வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் அந்தப் பகுதியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கின்றேன், நன்றி வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 478, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

478—

தடுப்பணை

***26697**—**திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், ஜல்லிப்பட்டி கிராமத்திலுள்ள க.ச. எண்கள் 366, 341 மற்றும் 321-இல் தடுப்பணைகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், ஜல்லிப்பட்டி கிராமம் க.ச. எண்கள் 366, 341 மற்றும் 321-ல் தடுப்பணைகள் கட்டப்படுமா என்ற கேள்வியை இங்கே எழுப்பியுள்ளார்கள். திருப்பூர் மாவட்டம், ஜல்லிப்பட்டி கிராமம் புல எண் 366 இல் உள்ள காட்டோடையானது ஈசல் தட்டுமடைப் பகுதியில் உற்பத்தியாகி, அருகிலுள்ள திணைக்குளத்தில் சேர்கிறது. இந்த நீரோடையின் நீர்ப்பிடிப்புப் பரப்பானது மிக மிகக் குறைவாக உள்ளது. புல எண் 366-ன்கீழ் சுமார் 1 கி.மீ. தொலைவில் ஆயக்கட்டுப் பகுதியில் பயன்பெறும் கிணறுகள் ஏதும் இல்லை. மேலும், ஓடையின் அகலம் 5 மீட்டருக்குக் குறைவாகவே உள்ளது. எனவே, இங்கே தடுப்பணை அமைப்பதற்கு தொழில்நுட்ப ரீதியாக சாத்தியக் கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 மே 13]

முற்பகல் 10-40

ஜல்லிப்பட்டி கிராமம் புல எண் 341, 321 இல் அமைந்துள்ள ஓடையானது கண்ணிமார் ஓடை என்று அழைக்கப்படுகிறது. இந்த ஓடையில் புல எண் 341-ன் மேற்புறத்தில் புல எண் 331 இல் தடுப்பணையும், கிழ்புறத்தில் புல எண் 366 இல் கங்கநாயக்கன் குட்டையும் அமைந்துள்ளது. புல எண் 341 ஆனது புல எண் 331 இல் அமைந்துள்ள தடுப்பணையின் ஈர்ப்பு மண்டலத்தில் Zone of influence-*ல் அமைந்துள்ளதால், புல எண் 341 இல் புதியதாகத் தடுப்பணை அமைக்கவேண்டிய அவசியம் இல்லை. புல எண் 321 இல் தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தடுப்பணை கட்டி முடிக்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளது. எனவே, இங்கு மேலும் தடுப்பணை அமைக்கவேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.*

திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும்போது, நிலத்தடி நீர் குறைவாக உள்ளதால் வாய்ப்பு குறைவாக உள்ளது என்று கூறினார்கள். ஏற்கெனவே, அந்த இடத்தில் பல்வேறு துறைகளின்மூலமாக தடுப்பணை கட்டப்பட்டிருந்தாலும்கூட, பொதுப் பணித் துறையின் மூலமாக மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, உடுமலைப்பேட்டை வட்டம், தேவனூர் ஊராட்சியில் வரப்பள்ளம் என்ற இடத்தில் 379 காலையிலும், இராமநாதபுரம் ஊராட்சியில் இருக்கக்கூடிய ஓடையில் 349 எஸ்.எப். காலையிலும், தேவனூர் ஊராட்சிக்குட்பட்ட நல்லாற்றின் குறுக்கே இருக்கக்கூடிய தடுப்பணை 289 காலை நெம்பர்களிலும், அதேபோல புல எண் 248 காலை நெம்பரிலும், நெலயமுத்தூர் ஊராட்சியில் இருக்கக்கூடிய 227 காலை எண்ணிலும் தடுப்பணைகள் கட்டுவதற்கு அரசுக்குக் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. எனவே, இதனை மாண்புமிகு அம்மா அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச்சென்று, அந்தப் பகுதி மிகக் கடுமையான வறட்சிப் பகுதியாக இருப்பதால், அங்கு தடுப்பணை கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.*

[2013 மே 13

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, சாத்தியகூறு இருப்பின் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.*

திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன். அங்கே மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் பரம்பிக்குளம் ஆழியாறு உயர்மட்ட கால்வாய் பணியானது நடைபெற்று வருகிறது. அந்தக் கால்வாயின் வழியோரத்தில் 20 கி.மீ. தூரத்திற்கு ஆயக்கட்டில் சேராத 5,000 ஏக்கர் நிலம் உள்ளது. அங்கு முழுவதும் தென்னை விவசாயம் செய்து, தென்னை மரங்கள் காயும் நிலையில் இருக்கின்றன. மேலும், அங்கு கால்வாய் பணி நடைபெறுவதால், நீர்வரத்துக் கிடைக்கக்கூடிய வாய்ப்பு குறைவாக உள்ளது. அந்தப் பகுதியை ஆயக்கட்டில் சேர்த்தோ அல்லது சொட்டுநீர் பாசனத்தின் மூலமாகவோ, நம்முடைய மாநிலத்தில் ஒரு மாடலாக எடுத்து, அந்தப் பகுதியில் தண்ணீர் கிடைப்பதற்கு உரிய ஏற்பாடுகள் செய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச் சென்று, அவற்றைச் செய்து தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் வாய்க்காலினுடைய கசிவுநீர் பாய்வதாலும், 30 ஆண்டுகளுக்கும் மேலாக தென்னை மரங்கள் வைத்திருக்கின்ற காரணத்தினாலும், அதற்கு நிரந்தரமான தீர்வு ஏற்படுத்துகின்ற வகையிலேயும், மாண்புமிகு புரட்சித் தலைவி*

2013 மே 13]

அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, பொதுப் பணித் துறை மற்றும் விவசாயத் துறை இரண்டும் இணைந்து அங்கு புதிய திட்டத்தை உருவாக்க பணிகள் நடைபெற்றுகொண்டிருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 479, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

479—

கால்நடை மருத்துவமனை

4936—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரத்திலுள்ள கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற ராதாபுரத்தில் உள்ள கால்நடை மருந்தகத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தவேண்டுமென்று சொன்னால், அங்கு 10,000 கால்நடை அலகுகள் இருக்கவேண்டும். தற்போது, 9,700 கால்நடை அலகுகள்தான் இருக்கின்றன. இந்த ஆண்டு 300 கால்நடை அலகுகளின் எண்ணிக்கை உயர வாய்ப்பிருக்கிறது. எனவே, 10,000 ஆக அலகு உயரும்போது அடுத்த ஆண்டு அங்கு மருத்துவமனை அமைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும்.

மேலும், மாண்புமிகு அம்மா அவர்களை நம்பி கெட்டவர்கள் யாரும் இல்லை. நம்பாமல் கெட்டவர்கள்தான் அதிகம் இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, மாண்புமிகு அம்மா அவர்களை நம்பி இருக்கின்ற திரு. மைக்கேல் ராயப்பன் அவர்களின் பகுதியில் விதிகளுக்குட்பட்டு மாண்புமிகு அம்மா